RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 181 | ஜூலை.6 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# கல்வித் துறையை சீரழிக்கிறது திமுக அரசு: நயினார் நாகேந்திரன் சாடல்



சென்னை: ஜூலை.6-

பள்ளி, கல்லூரிகளில் ஆசிரியர்களை நியமிக்காமல் காலம் தாழ்த்தி, கல்வித் துறையை திமுக அரசு சீரழிப்பதாக தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதள பதிவில், "கடந்த 2023ம் ஆண்டில் 3,192 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 2024 பிப்ரவரியில் தேர்வு நடத்தி, மே மாதம் சான்றிதழ் சரிபார்ப்பு பணியும் முடிந்தது. இது கடந்து ஓர் ஆண்டு ஆன பிறகும், பணி நியமன ஆணை வழங்க முடியாத அளவுக்கு திமுக அரசின் நிர்வாகம் செயலற்று இருக்கிறது.

ஆசிரியர்கள் இல்லாமல் பல அரசுப் பள்ளிகள் அல்லல்படுகின்றன. அதேபோல, கலை கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் என அரசு கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் பேராசிரியர்கள் பற்றாக்குறையால் உயர்கல்வித் துறை முற்றிலும் முடங்கி உள்ளது.

இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணை வழங்காமல் இழுத்தடிப்பது, பகுதி நேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்யாதது, உதவி பேராசிரியர்களுக்கான தேர்வுகளை நடத்தாமல் காலம் தாழ்த்துவது, கவுரவ விரிவுரையாளர்களுக்கு முறையான ஊதியம் வழங்காதது என திமுக அரசு தனது திறனற்ற செயல்பாட்டால் கல்வித் துறையை மேலும் சீரழித்து வருகிறது.

தமிழக கல்வித் துறை மீதும், தமிழக மக்களின் எதிர்காலம் குறித்தும் சிறிதேனும் அக்கறை இருந்தால், இனியும் காலம் தாழ்த்தாமல், தேர்ச்சி பெற்ற பள்ளி ஆசிரியர்களுக்கு உடனடியாக பணி நியமன ஆணை வழங்க வேண்டும். கல்லூரிகளில் போதிய பேராசிரியர்களை நியமிக்க வேண்டும்" என்று அவர் கூறியுள்ளார்.

# "இந்தி திணிப்புக்கு எதிரான மராட்டியத்தின் எழுச்சி..." முதல்வர் ஸ்டாலின் உற்சாகம்





சென்னை: ஜூலை.6-

"இந்தி திணிப்புக்கு எதிராக சகோதரர் உத்தவ் தாக்கரே தலைமையில் மும்பையில் நடந்த வெற்றிக் கொண்டாட்டப் பேரணியின் எழுச்சியும், உரை வீச்சும் மிகுந்த உற்சாகம் தருகிறது" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "இந்தி திணிப்பை முறியடிக்க திமுகவும், தமிழக மக்களும் தலைமுறை தலைமுறையாக நடத்திவரும் மொழி உரிமைப் போர், மாநில எல்லைகளைக் கடந்து தற்போது மராட்டியத்தில் சூறாவளியாகச் சுழன்றடித்துக் கொண்டிருக்கிறது.

தமிழகப் பள்ளிகளில் 3வது மொழியாக இந்தியைக் கற்பித்தால்தான் நிதி ஒதுக்குவோம் என்று சட்டத்துக்குப் புறம்பாகவும் அராஜகமாகவும் நடந்துகொள்ளும் பாஜக, தாங்கள் ஆட்சி செய்யும் மகாராஷ்டிராவில் மக்கள் எழுச்சிக்கு அஞ்சி 2ம் முறையாகப் பின்வாங்கி இருக்கிறார்கள். இந்தி திணிப்புக்கு எதிராக சகோதரர் உத்தவ் தாக்கரே தலைமையில் மும்பையில் நடந்த வெற்றிக் கொண்டாட்டப் பேரணியின் எழுச்சியும், உரை வீச்சும் மிகுந்த உற்சாகம் தருகிறது.

உத்தரப் பிரதேசத்திலும், ராஜஸ்தானிலும் கற்பிக்கப்படும் மூன்றாம் மொழி என்ன, இந்தி பேசும் மாநிலங்கள் பின்தங்கி இருக்கின்றன, இந்தி பேசாத முன்னேறிய மாநிலங்களின் மக்கள் மீது ஏன் இந்தியைத் திணிக்கிறீர்கள் என்று ராஜ் தாக்கரே எழுப்பிய கேள்விகளுக்கு, இந்தியையும், சம்ஸ்கிருதத்தையும் வளர்ப்பதையே முழுநேர முன்னுரிமையாக வைத்திருக்கிற மத்திய அரசிடம் எந்த பதிலும் இருக்காது.

மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தி சம்ஸ்கிருதத்தைத் திணிக்கும் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே ஒருங்கிணைந்த கல்வித் திட்ட நிதி ரூ.2,152 கோடியை விடுவிப்போம் என்று தமிழகத்தைப் பழிவாங்கும் போக்கை மத்திய அரசு மாற்றிக் கொள்ளுமா? தமிழகப் பள்ளிக் குழந்தைகளின் கல்விக்காகச் சட்டப்பூர்வமாக வழங்க வேண்டிய நிதியை உடனே விடுவிக்குமா?

இந்தி ஆதிக்கத்துக்கு எதிராக தமிழக மக்கள் நடத்திவரும் போராட்டம் உணர்வுமயமானது மட்டுமல்ல, அறிவுப்பூர்வமானது. இந்தி திணிப்பால் ஏராளமான இந்திய மொழிகள் அழிந்த வரலாற்றை அறியாமலும், இந்தியாவை இந்தி நாடாக்கும் செயல்திட்டத்தைப் புரிந்துகொள்ளாமலும், 'இந்தி படித்தால் வேலை கிடைக்கும்' என்ற வார்த்தைகளைக் கிளிப்பிள்ளைகளைப்போல ஒப்பித்துக் கொண்டிருக்கும் இங்குள்ள சிலர், இனியாவது திருந்த வேண்டும். மராட்டியத்தின் எழுச்சி அவர்களின் அறிவுக் கண்களைத் திறக்கும்.

தமிழுக்கு நிதி ஒதுக்கீட்டில் ஓரவஞ்சனை, கீழடி நாகரிகத்தை அங்கீகரிக்க மறுக்கும் ஆணவத்தை நீடிக்கவிட மாட்டோம். தமிழுக்கும், தமிழகத்துக்கும் பாஜக செய்துவரும் துரோகத்துக்கு பாஜக பரிகாரம் தேட வேண்டும். இல்லையேல், அவர்களுக்கும், அவர்களது புதிய கூட்டாளிகளுக்கும் தமிழகம் மறக்க முடியாத பாடத்தை மீண்டும் கற்பிக்கும்" என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்ராவில் நடந்தது என்ன? முன்னதாக, மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் தலைமையிலான, பாஜக சிவசேனா தேசியவாத காங்கிரஸ் கூட்டணி அரசு, சமீபத்தில் ஒன்றாம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை மும்மொழிக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. 3வது மொழியாக இந்தி மொழி இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு, உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவ சேனா (உத்தவ் பாலாசாகேப் தாக்கரே) கட்சியும், ராஜ் தாக்கரே தலைமையிலான மகாராஷ்டிர நவ நிர்மாண் சேனாவும்(எம்என்எஸ்) கடும் எதிர்ப்பு தெரிவித்தன. மகாராஷ்டிர அரசு எங்கள் மீது இந்தியை திணிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்றும் அவர்கள் கண்டனம் தெரிவித்தனர். இதற்கு மாநிலம் முழுவதும் பெரும் ஆதரவு திரண்டதை அடுத்து, மாநில அரசு தனது அறிவிப்பை திரும்பப் பெற்றது.

மகாராஷ்டிர மாநில அரசின் இந்த முடிவை அடுத்து, அதற்கான வெற்றி விழா மும்பையில் சிவசேனா, எம்என்எஸ் இணைந்து நடத்தின. இந்நிகழ்ச்சியில், சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு உத்தவ் தாக்கரேவும், ராஜ் தாக்கரேவும் ஒன்றாக இணைந்து மேடையில் தோன்றினர். அப்போது, அரங்கத்தில் இருந்த இரண்டு கட்சிகளின் தொண்டர்களும் உற்சாகத்தில் கோஷங்களை எழுப்பியது குறிப்பிடத்தக்கது.



# "நிகிதாவை விசாரிக்க வேண்டும்" திருப்புவனம் ஆர்ப்பாட்டத்தில் பிரேமலதா வலியுறுத்தல்

திருப்புவனம்: ஜூலை.6-

தமிழகத்தில் காவல் துறை காவு வாங்கும் துறையாக மாறி வருகிறது என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் சாடினார். மேலும், அஜித்குமார் கொலை வழக்கில் நிகிதாவை முதலில் விசாரிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அஜித்குமார் கொலைக்கு நீதி கேட்டு சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் தேமுதிக சார்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கலந்து கொண்டு பேசியது: "மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமாரை அடித்தே கொன்றுள்ளனர். காவல் துறையினர் மமதையில் இருக்கக்கூடாது. போலீஸ் எப்படி இருக்க வேண்டும் என அடையாளமாக இருந்தவர் விஜயகாந்த். காவல் துறை வெட்கப்படும் நிலைக்கு இந்தக் கொலை நடந்துள்ளது.

தமிழக காவல் துறை என்பது காவு வாங்கும் துறையாக மாறியுள்ளது. மக்களை வஞ்சிக்கும் துறையாக, ஏமாற்றும் துறையாக, லஞ்சம் ஊழல் நிறைந்த துறையாக மாறியுள்ளது. கொலை வழக்கில் கண்துடைப்பாக 5 போலீஸாரை கைது செய்துள்ளனர். உண்மை நிலை மக்களுக்குத் தெரிய வேண்டும். நீதிபதிகள் உண்மையைக் கண்டுபிடித்து மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இனிமேல் யாரையும் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்று கொலை செய்வது தடுக்க வேண்டும்.

வரதட்சிணையால் தமிழகம் முழுவதும் 4 பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். திமுக ஆட்சியில் 24 லாக்அப் கொலைகள் நடந்துள்ளன. இதேபோல் தூத்துக்குடியில் நடந்தபோது வானத்துக்கும் பூமிக்கும் குதித்த திமுக கூட்டணியில் இருப்பவர்கள் தற்போது வாயைத் திறக்கவில்லை. கூட்டணி என்றால் மக்கள் பிரச்சினை முக்கியமில்லையா? உங்களுக்கு வாக்களித்தவர்கள் முக்கியமில்லையா?

தமிழக முதல்வர் ஸ்டாலின், அஜித்குமாரின் தாயாரிடம் போனில் 'சாரிஞ் மா' என்று பேசுகிறார். 'சாரி மா' என்றால் உயிரிழந்த மகன் உயிருடன் வந்து விடுவாரா? காவல் துறை முதல்வர் கையில் உள்ளது. இதற்கு முதல்வர் பொறுப்பேற்க வேண்டும். முதலில் நிகிதா என்ற பெண்ணை காவல் துறையும் நீதியரசர்களும் விசாரிக்க வேண்டும்.

கள்ளச்சாராயம், கஞ்சா என தமிழ்நாடு போதை மாநிலமாக மாறி வருகிறது. தடுக்க வேண்டிய அரசு வேடிக்கை பார்க்கிறது. அடுத்து ஆட்சிக்கு வருவது பற்றி கவலைப்படும் தமிழக முதல்வர் மக்களைப் பற்றி கவலைப்படுவது இல்லை. திமுக ஆட்சிக்கு வந்தால் அராஜகம்தான். யாருக்கும் பாதுகாப்பில்லை என்ற முறையில் ஆட்சி நடக்கிறது. லத்தியை போலீஸ் கையிலிருந்து வாங்கினால்தான் மக்களுக்கு தீர்வு கிடைக்கும். காவல் துறையின் கவுரவத்தை காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

தமிழகத்திலிருந்து மதுக்கடைகள் ஒழித்தால்தான் விடிவுகாலம். நல்ல மாற்றத்தை அடுத்த தேர்தலில் தாருங்கள். திமுக ஆட்சியின் அராஜகங்கள் மாற வேண்டும். பெண்கள் நினைத்தால் மாற்றத்தை புரட்சியை ஏற்படுத்த முடியும். அஜித்குமார் குடும்பத்தினருக்கு நீதி, நியாயம் வேண்டும். கொலைக் குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும். காவல் துறை அராஜக போக்கை கைவிட வேண்டும்" என்று அவர் பேசினார்.

# திருச்செந்தூர் கும்பாபிஷேக விழாவில் அன்னதானம் செய்ய முறையான அனுமதி தேவை: அமைச்சர் சேகர்பாபு



சென்னை: ஜூலை.6-

"திருச்செந்தூர் முருகன் கோயில் கும்பாபிஷேக விழாவில் முறையான அனுமதி பெற்று யார் வேண்டுமானாலும் அன்னதானம் செய்யலாம்" என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.

இது குறித்து சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் கும்பாபிஷேகம் வரும் 7ம் தேதி நடைபெற உள்ளது. அதில் லட்சக்கணக்கான மக்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருச்செந்தூர் முருகன் கோயில் கும்பாபிஷேக விழாவுக்கு மூன்று இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்களும், கோயில் கும்பாபிஷேகத்தை அனைத்து பகுதிகளிலும் காணும் வகையில் எல்இடி திரைகள் அதிக எண்ணிக்கையில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், பக்தர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மருத்துவ வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு பணியில் 6,000 காவலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். 25 மருத்துவக் குழுக்களும், 27 இடங்களில் தீயணைப்பு வாகனங்களும் தயார் நிலையில் வைக்கப்படவுள்ளன. கும்பாபிஷேக விழா பணிகளுக்காக மூன்று ஐஏஎஸ் அதிகாரிகளை கூடுதல் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோயில்களில் மருந்து சாத்திய பிறகுதான் கும்பாபிஷேகம் நடைபெறும். ஆனால், திருச்செந்தூர் கோயிலில் கும்பாபிஷேகம் நடந்த பின்னரே மருந்து சாத்தும் நிகழ்வு நடைபெறுவது மரபாக உள்ளது. எனவே, மரபு மற்றும் கடந்த கும்பாபிஷேகங்களின் பழக்க வழக்கத்தின்படி கும்பாபிஷேகத்துக்கு முந்தினம் பகல் 12 மணிக்கு நடை அடைக்கப்படுவதோடு, மறுநாள் காலையில் கும்பாபிஷேகம் நிறைவு பெற்ற பின், மருந்து சாத்தும் நிகழ்வு மாலை வரை நடைபெறும். அதற்கு பின்னரே பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிப்பது தொடர்பாக முடிவெடுக்கப்படும்.

கும்பாபிஷேக விழாவில் முறையான அனுமதி பெற்று யார் வேண்டுமானாலும் அன்னதானம் செய்யலாம். அவர்கள் வழங்கும் அன்னதானத்தை பரிசோதிப்பதற்கு அன்னதான பரிசோதனை குழு ஒன்றை அமைத்திருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்து முன்னணி எதிர்ப்பு: முன்னதாக, இந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கோயில் திருவிழாக்கள் என்றாலும், கும்பாபிஷேக விழாக்கள் என்றாலும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவது நடைமுறை வழக்கம். பலர் தாமாகவே முன்வந்து அன்னதானம் செய்ய நினைக்கின்ற போது, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் உரிய அனுமதி பெற்று வர வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அப்படி அனுமதி வாங்கி வந்த பிறகும் கூட திருச்செந்தூரில் அன்னதானம் செய்ய கடும் கட்டுப்பாடுகள் நிலவுகிறது. இதை மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும், இந்து சமய அறநிலையத் துறையும் கவனத்தில் கொண்டு அன்னதானம் வழங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டும்" என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# 'பழங்குடியின பெண்களை வரி செலுத்துவோராக உயர்த்திய ஈஷா' மத்திய அமைச்சர் பாராட்டு

கோவை: ஜூலை.6-

பழங்குடியின பெண்களை வரி செலுத்துவோராக ஈஷா உயர்த்தியுள்ளது என்றும், இது வளர்ந்த பாரதம் என்ற இலக்கை அடைய வழி வகுக்கும் முன்னெடுப்பு என்றும் மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் ஜூவல் ஓரம் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஈஷா அறக்கட்டளை வெளியிட்ட அறிக்கை: ஈஷா அறக்கட்டளை பல ஆண்டுகளாக அருகிலுள்ள பழங்குடி மற்றும் கிராமப்புற பகுதியில் உள்ள மக்களுக்கு கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார வாய்ப்புகளை வழங்கி வருகிறது. குறிப்பாக, இப்பகுதி மாணவர்கள் உயர் கல்வியை தொடர கல்வி உதவித் தொகைகள், அனைத்து மக்களுக்கும் 24 மணி நேரமும் சுகாதார சேவைகள், கழிவு மேலாண்மை, ஊட்டச்சத்து தொகுப்புகள் மற்றும் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு திறன் மேம்பாட்டு பட்டறைகள் நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை ஈஷா செய்து வருகிறது.


இந்நிலையில், கோவை ஈஷா யோக மையதுக்கு நேற்று மத்திய பழங்குடியினர் விவகாரத் துறை அமைச்சர் ஜூவல் ஓரம் வருகை புரிந்தார். அப்போது, ஈஷாவைச் சுற்றியுள்ள பழங்குடியின மக்களுடன் கலந்துரையாடினார்.

மேலும், 'ஈஷாவின் வழிகாட்டுதலின் கீழ் 2018 ஆம் ஆண்டில், தாணிக்கண்டி பழங்குடியின கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் ஒன்றிணைந்து, நபருக்கு வெறும் 200 ரூபாய் முதலீட்டில் 'செல்லமாரியம்மன் சுய உதவிக் குழுவை' உருவாக்கினர். இந்த சுய உதவிக்குழு மூலம் ஆதியோகி வளாகத்தில் சிறிய கடையை அவர்கள் நடத்தத் தொடங்கினர்.

மிகச் சிறிய முதலீட்டில் துவங்கிய அவர்களின் கடை இன்று 1 கோடிக்கும் மேல் வர்த்தகம் செய்யும் செழிப்பான நிறுவனமாக வளர்ந்துள்ளது. இன்று இந்த பழங்குடியினப் பெண்கள் சுய தொழில்முனைவோர்களாக உருவெடுத்து, பெருமையுடன் வரி செலுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் அளவிற்கு உயர்ந்துள்ளனர்' என்பதை குறிப்பிட்டே அமைச்சர் ஈஷாவின் பழங்குடியின நலப் பணிகளை பாராட்டினார்.

அதன் பின்னர், ஈஷாவின் பிற கிராமப்புற மற்றும் பழங்குடி நலப் பணிகள் குறித்து மிகுந்த ஆர்வத்துடன் கேட்டறிந்த அமைச்சர், ஈஷாவுக்கு அருகிலுள்ள பழங்குடி கிராமத்திற்கு சென்று கிராம மக்களுடன் உரையாடினார். இதன் பின்பு பேசிய அமைச்சர், "கிராமப்புற மேம்பாடு, கல்வி, சுகாதாரம், ஆன்மிகம் மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாத்தல் உள்ளிட்ட ஈஷாவின் பணிகள் பாராட்டத்தக்கவை. இன்று நான் பார்வையிட்ட கிராமத்தின் வளர்ச்சியில், ஈஷா முக்கிய பங்கு வகித்துள்ளது. மேலும் பழங்குடியின மக்கள் ஈஷாவுடன் இணைந்து இருப்பதில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

ஈஷா அறக்கட்டளையின் உதவியால் பழங்குடியினப் பெண்களின் வாழ்வாதாரம் உயர்ந்து, தற்போது வரி செலுத்துகிறார்கள் என்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. இதுபோன்ற முன்னெடுப்புகள் வளர்ந்த பாரதம் என்ற இலக்கை அடைய வழி வகுக்கும். மேலும் இது பிரதமர் மோடி மற்றும் சத்குருவின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றும்" எனக் கூறினார்.




# முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் காணொளியின் மூலம் பொன்மார் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா

பொன்மார்,ஜூலை.06-

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், பொன்மார் ஊராட்சியில் 03.07.25 நாளயன்று வியாழக்கிழமை பொதுப்பணித்துறையின் மூலம் ரூபாய் 1.20 கோடி ஒதுக்கீட்டில் கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட் டிற்காக காலை 11:45 மணிக்கு காணொளி மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் மு .க .ஸ்டாலின் திறந்து வைத்தார். வரவேற்புரை வகித்த பொன்மார் ஊராட்சி மன்ற தலைவர், ஸ்ரீ. நாராயணன் அனைவரையும் வருக வருக என வரவேற்றார். முன்னிலை வகித்த செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர், டி. சினேகா ,காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர், க. செல்வம், திருப்போரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், எஸ் .எஸ் .பாலாஜி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் ,எஸ். ஆர் .எல் .இதய வர்மன் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டங்களை வழங்கி விழாவை சிறப்பித்தனர் . இந்நிகழ்வில் பொன்மார் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், பி.டி வெங்கடேசன், விழாவில் கலந்து கொண்ட நாவலூர் ஊராட்சி கழக செயலாளர், மு. ராஜாராம் , திருப்போரூர் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர், எக்ஸ்பிரஸ் எல்லப்பன் மற்றும் பொன்மார் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மாலதி கணபதி, சுதா ராணி பரணிதரன், நதியா மாரி, மகேஷ், ஜெயா சாமுண்டி, சத்திய பிரியா ராஜன், ராஜா, தீபா செந்தில் மற்றும் ஊராட்சி செயலர், டி .காளீஸ்வரி மற்றும் திமுக கழக நிர்வாகிகள்,அரசு அதிகாரிகள், பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.



# மனிதநேய மக்கள் கட்சி மாநாடு பேரணிக்கு விரிவான ஏற்பாடுகள்: எம்.எச். ஜவாஹிருல்லா பேட்டி

மதுரை, ஜூன்.06-

மதுரையில்மனிதநேய மக்கள் கட்சி சார்பில் (ஜூலை 6) நடைபெற வுள்ளள்ள மாநா ட்டில் லட்சக்கண க்கானோர் பங்கேற் கவுள் ளனர். இதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு ள்ளதாக அக்கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹி ருல்லா செய் தியாளர்களிடம் கூறியதாவது :தமிழர்களின் நலனுக்காக பாடுபட்டவர்களுக்கு வழங்கப் படும் தகைசால் தமிழர் விருது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே.எம். காதர் மொய்தீனுக்கு அறிவிக்கப் பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இந்த விருது அவருக்கு மிகவும் பொருத்தமா னது. இதற்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி.

சிறுபான்மை உரிமைகளுக் கான 1992ஆம் ஆண்டின் ஐ.நா. பிரகடனம், சிறுபான்மையினரின் உரிமையியல், அரசியல் உரிமை களுக்கான சர்வதேச உடன்பாடு உள்ளாட்சி அமைப்புகள் முதல் நாடாளுமன்றம் வரை அனைத்து அமைப்புகளிலும் முஸ் லிம்களுக் கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டும், வக்ஃப் திருத் தச்சட்டத்தைமத்திய அரசு உடனடியாகத் திரும்பப்பெறவேண்டும் என்ற கோரிக்கைகளை வலியு றுத்தி, மனிதநேய மக்கள் கட்சி சார்பில், மதுரை மஸ்தான்பட்டி யில் (ஜூலை6) மாநாடு நடைபெறுகிறது.

அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு பி.எஸ். பெருங்காயம் நிறுவனத்தின் அருகிலிருந்து பேரணி தொடங்கி, மாநாட்டுத் திடலில் நிறைவடையும். இதைத் தொடர்ந்து மாநாடு நடைபெறும். இந்த மாநாட்டில் தமிழ் மையம் நிறுவனர் முனைவர் ஜெகத் கஸ்பர் ராஜ், கும்பகோணம் ஜோதிமலை திருக்கூடம் நிறுவனர் திருவடிக்குடில் சுவாமிகள், முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி அப்துல் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்கின்றனர். இம் மாநாட்டில் லட்சக்கணக்கானோர் பங்கேற்பர். இதையொட்டி விரிவான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. விஜயின் தவெகவுடன் மமககூட்டணி இணையுமா? என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், திமுக கூட்டணியில் மமக தொடரும். தவெக, எதிர்க் கட்சிகளின் கூட்டணியில் மமக இடம்பெறாது. விஜய் இதுவரை பகுதி நேர அரசியல்வாதியாகத்தான் உள் ளார். அவரே முதல்வர் வேட்பா ளர் என்பதை அனுபவபூர்வ பிரசாரமாக கருதவில்லை என கூறினார். உடன் அப்துல் சமது எம் எல் ஏ மாநிலத் துணைப் பொதுச்செயலாளர் மைதீன் சேட்கான் மாநில அமைப்பு செயலாளர் மிட்டாய் காதர் மாநில அமைப்பு செயலாளர் புழல் ஷேக் மதுரை மாவட்ட தலைவர் சீனி அகமது ஆகியோர் உள்ளனர்.



■ மதுரை மாவட்டம் சின்ன சொக்கிகுளத்தில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூபாய்.5.90 கோடி மதிப்பீட்டில் மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டட பணிகளுக்கான பூமி பூஜையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., , சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் அ.வெங்கடேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.





# காளையார்கோவிலில் மாபெரும் இரத்த தான முகாம்

காளையார் கோயில், ஜூலை.06-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி இந்திய செஞ்சிலுவை சங்கம் மிதிவண்டி கழகம் இணைந்து மாபெரும் இரத்த தான முகாம் ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. பள்ளியின் தாளாளர் சேகர் ஸ்டாலின் ரவீந்திரன் லெனின் ஜீவானந்தம் தலைமை வகித்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் முனைவர் கோபிநாத்



காளையார்கோவில் கிளைத் தலைவர் பள்ளியின் முதல்வர் வீரபாண்டி விளையாட்டு மையங்களின் கூட்டமைப்பு தலைவர் பக்கீர் முஹைதீன் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி வரவேற்புரையாற்றினார். மாஸ்டர் ஸ்போர்ட்ஸ் கிளப் தலைவர் ராஜா விளையாட்டு மையங்களின் கூட்டமைப்பு செயலாளர் முனைவர் சூசை ஆரோக்கிய மலர் மேனாள் ஊராட்சி மன்றத் தலைவர் ராமச்சந்திரன் சிவகங்கை மாவட்ட இந்திய செஞ்சிலுவை சங்க மாவட்ட துணை செயலாளர் முத்துப்பாண்டி வாழ்த்துரை வழங்கினர். இரத்த மையம் அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை சார்பாக இரத்த மைய மருத்துவ அலுவலர் டாக்டர் சித்து ஹரி காளையார்கோவில் மூத்த உதவி அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பாபா ரத்த மைய மருத்துவ ஆலோசகர் சூசைராஜா டாக்டர் பாலமுரளி குமார் ஆகியோர் இரத்த தான முகாமை சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். தமிழ்நாடு அறிவியல் இயக்க காளையார் கோவில் கிளைச் செயலாளர் அலெக்ஸாண்டர் துரை நன்றி கூறினார். 40 க்கும் மேற்பட்ட கொடையாளர்கள் தங்கள் இரத்தத்தை கொடுத்து மகிழ்ந்து சென்றனர். அவர்களுக்கு உடனடி பழச்சாறும் சான்றிதழ்களும் புத்தகங்களும் நினைவு பரிசாக வழங்கப்பட்டன. இரத்த தானம் கொடுப்பது குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது. பள்ளியின் ஆசிரியப் பெருமக்கள் சிறப்பான ஏற்பாட்டினை செய்திருந்தனர்.

# ககன்யான் திட்டத்தின் எஞ்சினின் 4ம் கட்ட சோதனை வெற்றி: இஸ்ரோ தகவல்

நெல்லை, ஜூலை.06-

நெல்லை மகேந்திரகிரி இஸ்ரோ மையத்தில் மனிதனை விண்ணிற்கு அனுப்பும் ககன்யான் திட்டத்திற்கு 130 வினாடிகள் நடை பெற்ற எஸ்.எம்.எஸ் .டி.எம் மாடுல் என்ஜினின் 4ம் கட்ட சோதனை வெற்றிபெற்றதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. திருநெல்வேலி மாவட்டம், பணகுடி அருகே உள்ள காவல்கிணறு கிராமத்தில் மகேந்திரகிரி மலை உள்ளது. இந்த மலையின் அடிவாரத்தில் மகேந்திரகி இஸ்ரோ மையம் செயல் பட்டு வருகிறது.இங்கு ராக்கெட்டு களுக்கான கிரையோஜெனிக் என்ஜின், விகாஸ் என்ஜின் மற்றும் பி.எஸ்.4 என்ஜின் போன்றவற்றைத் தயாரித்து பரிசோதிக்கிறார்கள்.

மேலும், இந்த மையத்திலிருந்து விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தின் விண்ணில் செலுத்தப்பட இருக்கும் இஞ்சின்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில், மகேந்திரகிரி இஸ்ரோ மையத்தில் ககன்யான் திட்டத்தின் எஞ்சினின் 4ம் கட்ட சோதனை வெற்றி பெற்றதாக இஸ்ரோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். SMSDM என்ற மாடலிங் எஞ்சினின் 4ம் கட்ட சோதனை நிர்ணயிக்கப்பட்ட இலக்கை வெற்றிகரமாக அடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். இதனால் இஸ்ரோ விஞ்ஞானிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

present sale for all over Tamil Nadu
தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் (DHEW) ஒப்பந்த அடிப்படையிலான தகவல் தொழில் நுட்ப உதவியாளர் (IT Assistant) பணியிடத்திற்கு

# வருகின்ற 18.07.2025 ஆம் தேதிக்குள் குறிப்பிட்டுள்ள முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைத்திடல் வேண்டும்

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.05-

சிவகங்கை மாவட்டத்தில் ஒன்றிய அரசின் திட்டங்கள் திறன்பட செயல்படுத்தப் படுவதையும், திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு பயன்பாட்டு சான்று அடிப்படையில் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்தவும், பயனாளிகள் மற்றும் திட்டப்பலன்கள் கண்காணிக்கவும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் மாவட்ட மகளிர் அதிகார மையம் (DHEW) கடந்த நவம்பர் 2023 முதல் சிவகங்கை மாவட்டத்தில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு (DHEW) ஒப்பந்த அடிப்படையில் தகவல் தொழில் நுட்ப உதவியாளர் (IT Assistant) பணியிடத்திற்கு பணி நியமனம் செய்யும் பொருட்டு, கீழ்க்கண்ட நிலையில் பணியாளர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

தகவல் தொழில்நுட்ப உதவியாளர் : 1 (ஒன்று) (IT Assistant)

தொகுப்பூதியம் : ரூ. 20,000/

கல்வித் தகுதி : கணினி / ஐடி பாடப்பிரிவில் இளங்கலைப்பட்டம்

வயது வரம்பு : 35 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.

பணியிடம் : சிவகங்கை

முன் அனுபவம் : அரசு அல்லது அரசு சாரா/ தகவல் தொழில்நுட்பம் சார்ந்த மாநில அல்லது மாவட்ட அளவில் தரவு மேலாண்மை, செயல்முறை ஆவணங்கள் மற்றும்வலை அடிப்படையிலான அறிக்கையிடல் வடிவங்களில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

எனவே, ஆர்வமுள்ள தகுதியான நபர்கள் தங்களது சுயவிபரங்களை வருகின்ற 18.07.2025 அன்று மாலை 05.00 மணிக்குள் தரை தளம், மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், சிவகங்கை என்ற முகவரிக்கு நேரிலோ, அல்லது தபால் மூலமாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைத்திடல் வேண்டும். மேலும், விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் வளாக தரை தளத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட சமூகநல அலுவலகத்தை நேரில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

# இராமநாதபுரம் மற்றும் இராமேஸ்வரம் பகுதிகளில் வனத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சி திட்டப்பணிகளை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பார்வையிட்டு ஆய்வு

இராமநாதபுரம், ஜூலை.06-

இராமநாதபுரம் மற்றும் இராமேஸ்வரம் பகுதிகளில் வனத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமையில் மாவட்ட வன உயிரின காப்பாளர் திரு.முருகன், மற்றும் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் திரு.ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



இந்த ஆய்வின்போது மாண்புமிகு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் திரு.ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் இராமநாதபுரம் வட்டம், ஆற்றங்கரை பகுதியில் வனத்துறையின் மூலம் கடல் அரிப்பை தடுக்கும் வகையில் உயிர்வேலி தோட்டம் பராமரிக்கப்பட்டு வருவதை பார்வையிட்டதுடன் மேலும் கடற்கரை ஓரமாக உள்ள கிராம பகுதிகளில் கடல் தண்ணீர் மூலம் பாதிப்பு ஏற்படாத வகையில் கரைகளை பலப்படுத்தும்; வகையில் இது போன்ற மரங்கள் நடவு செய்து கடல் அரிப்பை தடுத்திட வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து அரியமான் கடற்கரை பகுதிகளை பார்வையிட்டு இப்பகுதியில் சுற்றுலா பயணிகள் அதிகம் வருவதையொட்டி வனத்துறையின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார். பின்னர் சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையில் வனத்துறையின் மூலம் செயல்பட உள்ள சூழல் அங்காடி மையத்தை திறந்து வைத்து சுற்றுலா பயணிகள் விரும்பும் வகையில் உணவுப் பொருட்கள் மற்றும் அழகு சாதன பொருட்கள் விற்பனை செய்திட வேண்டுமென அறிவுறுத்தினார்.

தொடர்ந்து குந்;துக்கால் பகுதியில் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலா தலங்களை பார்வையிட்டத்துடன் கடல் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் படகில் சவாரி செய்து வருவதை பார்வையிட்டு கேட்டறிந்ததுடன் மேலும் சுற்றுலா பயணிகளுக்கு தேவைக்கேற்ப படகுகள் இயக்க வேண்டுமென தெரிவித்தார். மேலும் வனத்துறையின் மூலம் ஆழ்கடல் பகுதியில் கண்காணிப்பு பணிகளை மேற் கொள்ளும் வகையில் கண்காணிப்பு கேமராக்கள் செயல்பட்டு வருவதை பார்வையிட்டு அதன் பயன்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர் தனுஷ்கோடி எம்.ஆர்.சத்திரம் பகுதியில் உள்ள பறவைகள் கண்காணிப்பு மேடைகளை பார்வையிட்டதுடன் இராமேஸ்வரம் பகுதியில் உள்ள காப்புக்காடுகள் உள்ள தோட்டங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் ஹேமலதா அவர்கள், இராமேஸ்வரம் நகர் மன்றத்தலைவர் திரு.மு.நு.நாசர்கான் அவர்கள், இராமநாதபுரம் நகர் மன்றத்தலைவர் திரு.ஆர்.கே.கார்மேகம் அவர்கள், நகர்மன்ற துணைத்தலைவர்கள் திரு.டி.ஆர்.பிரவீன் தங்கம் அவர்கள் (இராமநாதபுரம்), திரு.ஏ.தெட்சனாமூர்த்தி அவர்கள் (இராமேஸ்வரம்), வட்டாட்சியர் திரு.ஜபார் முகம்மது அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## இஷா குப்தாவுடன் ஹார்திக் பாண்டியா காதலா?

இந்திய கிரிக்கெட் வீரராக திகழ்ந்து, ஐபிஎல், டெஸ்ட், டி20, ஒடிஐ போட்டிகள் என பல போட்டிகளில் இறங்கி அதிரடியாக ரன் அடித்து அசத்தி வருபவர் தான் ஹார்திக் பாண்டியா. கடந்த ஆண்டு தன்னுடைய மனைவி நடாஷாவை விவாகரத்து செய்து பிரிந்தார்.கர்ப்பமான பிறகுதான் இருவரும் திருமணம் செய்து கொண்டனர். தற்போது கிடைக்கும் நேரத்தில் தன் மகனுடன் நேரத்தினை செலவிட்டு வருகிறார். ஹார்திக் பாண்டியா, இப்போது வேறொரு நடிகையுடன் டேட்டிங் இருந்து வருவதாக கூறப்படுகிறது. 39 வயதான ஈஷா குப்தா, ஹார்திக் பாண்டியாவை டேட்டிங் செய்ததாக ஒரு தகவல் பரவி வந்தது.

ஹார்திக் பாண்டியாவை விட 8 வயது பெரியவராக இருக்கும் ஈஷா குப்தா, இதுகுறித்து முதன்முறையாக பேசியிருக்கிறார். அதில், தாங்கள் 2 மாதங்கள் பேசிக்கொண்டு மட்டும் இருந்ததாகவும், இது சமீபத்தில் நடந்ததாகவும் பேசியுள்ளார். மேலும் இது ஒரு உறவாக மாறிவில்லை, ஒன்று அல்லது இரண்டு முறை மட்டுமே இருவரும் சந்தித்திருக்கிறோம் என்றும் அதை தவிர வேறு எதுவும் தங்களுக்குள் நடக்கவில்லை. தங்களுக்குள் இருந்தது, உறவாக மாற வாய்ப்பிருந்ததாகவும் ஆனால் ஒற்றுமை இல்லாததால் அது ரிலேஷன்ஷிப்பாக மாறவில்லை, இதைத்தாண்டி வேறு எந்த டிராமாவும் நடக்கவில்லை என்றும் நடிகை ஈஷா குப்தா தெரிவித்துள்ளார்.



## ரசிகர்களின் அன்பு: விக்ரம் பிரபு நெகிழ்ச்சி

அஸ்யூர் பிலிம்ஸ் மற்றும் ரைஸ் ஈஸ்ட் என்டர்டெய்ன்மென்ட் நிறுவனத்தின் தயாரிப்பில், சக்தி பிலிம் ஃபேக்டரி வெளியீட்டில், அறிமுக இயக்குநர் சண்முகபிரியன் இயக்கத்தில் விக்ரம் பிரபு, சுஷ்மிதா பட், மீனாட்சி தினேஷ், அருள்தாஸ், ரமேஷ் திலக், முருகானந்தம் உள்ளிட்ட பலரது நடிப்பில் வெளியான 'லவ் மேரேஜ்' திரைப்படம் திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் படத்தை வெற்றி பெறச் செய்த ரசிகர்களுக்கும், ஊடகத்தினருக்கும் படக்குழுவினர் நன்றி தெரிவிக்கும் வகையில் விழா ஒன்றினை சென்னையில் ஒருங்கிணைத்திருந்தனர். இவ்விழாவில் படக் குழுவினர் கலந்து கொண்டனர்.

விக்ரம் பிரபு பேசுகையில், ''இந்தப் படத்தின் மூலம் ஏராளமான அன்பு கிடைத்திருக்கிறது. இப்படம் வெளியான பிறகு திரையரங்கத்திற்கு சென்று ரசிகர்களை சந்திக்கும் வாய்ப்பு இப் படக்குழு மூலம் கிடைத்தது. நீண்ட நாள் கழித்து மதுரைக்கு சென்றிருந்தேன். பொதுவாக ஒரு படத்தில் நடித்து முடித்த பிறகு என்னுடைய பணி நிறைவடைந்தது என்று மகிழ்ச்சியாக இருப்பேன். ஆனால் இந்த படம் வெளியான பிறகு சென்னை மற்றும் மதுரை உள்ள திரையரங்கத்திற்கு சென்று ரசிகர்களை சந்தித்தபோது அவர்களின் அன்பு என்னை வியக்க வைத்தது'' என்றார்.



## பறந்து போ — சினிமா விமர்சனம்:



காதல் திருமணம் செய்துகொண்ட கோகுல் (சிவா), குளோரி (கிரேஸ் ஆண்டனி) ஆகியோரின் பத்து வயது மகன் அன்பு (மிதுன் ரியான்). பொருளாதாரத் தேடல்களில் இருக்கும் இருவரும் அன்புவைத் தனியாக வீட்டில் விட்டுச் செல்கின்றனர். ஒரு கட்டத்தில் பிடிவாதம் கொண்ட அன்புவை அழைத்துக் கொண்டு, அன்றாடங்களில் இருந்து விடுபட்டு நீண்ட 'பைக் ரைடு'க்குச் செல்கிறார் கோகுல். அந்தப் பயணம்அவர்களுக்கு எதைப் புரிய வைக்கிறது? அங்கு சந்திக்கும் மனிதர்கள், என்ன மாற்றத்தை அவர்களுக்குள் ஏற்படுத்துகிறார்கள் என்பது கதை. பொருளாதார தேடலுக்குப் பின்னால் பரபரத்து ஓடும் அவசர வாழ்க்கையில் குழந்தைகளின் உலகத்தையும் ஆசைகளையும் எளிதாக மறந்து விடுகிறார்கள், பெற்றோர்கள். அவர்களின் எதிர்காலத்துக்காக அதிக செலவு செய்து படிக்க வைத்தாலும் தேவைகளை காஸ்ட்லியாக செய்தாலும் குழந்தைகளின் மனது அதில் இல்லை. அவர்கள் தங்கள் இயல்பை, 'குழந்தைமை'யைத் தேடுகிறார்கள் என் பதை, நகைச்சுவையோடும் அக்கறையோடும் உணர்வுப்பூர்வமாகப் பேசுகிறது படம். வழக்கமான தனது பாணியில் இருந்து முற்றிலும் மாறுபட்டு ஒரு படத்தை கொடுத்திருக்கும் இயக்குநர் ராம், அதில் அசத்தலான வெற்றியும் பெற்றிருக்கிறார். சிவா, குளோரி, அன்பு ஆகிய மூவரைச் சுற்றிய கதையில், அன்பு கோரிக்கை வைத்துக் கொண்டே இருக்க, அதைத் தொடர்ந்து அவர்கள் சந்திக்கிற சம்பவங்கள் மிகவும் இயல்பாகவும் சுவாரஸ்யமாகவும் இருப்பது படத்துக்குக் கூடுதல் பலத்தைக் கொடுக்கிறது. கதையோடு இணைந்த நகைச்சுவையும் திரைக்கதையின் வேகத்துக்கு உதவி இருக்கிறது. கோகுலின் அப்பா (பாலாஜி சக்திவேல்), 'ஸ்கூல் க்ரஷ்' வனிதா (அஞ்சலி), அவர் கணவர் குமரன் (அஜு வர்கீஸ்), 'டெக்ஸ்டைல் எக்ஸ்போ'வில் குளோரியிடம் வேலைபார்க்கும் அந்தப் பெண், கொட்டும் மழையில் ரோட்டோர மண்டபத்தில் தங்கும் 'எம்பரர்' என அனைத்து கதாபாத்திரங்களும் 'பாசிட்டிவா'க இருப்பதும் அவர்களின் தேவையும் கதைக்கு வலுவூட்டுகின்றன. இதுவரை பார்த்த சிவாதான் என்றாலும் இதில் 'நடிகராக' வளர்ந்திருக்கிறார். எமோஷனலான காட்சிகளிலும் கவனிக்க வைக்கிறார். கிரேஸ் ஆண்டனி தனது காதல் கணவரையும் மகனின் செல்லச் சேட்டைகளையும் சகித்து கொள்கிற பொறுமையை, இயல்பாக வெளிப்படுத்துகிறார். காதல் திருமணம் செய்து கொண்டதால், 'சாத்தானோடு சேர்ந்தால் சேலைதான் விற்க முடியும்' என்று சகோதரி திட்டிவிட்டுச் செல்லும் இடத்தில் கலங்க வைக்கிறார். மாஸ்டர் மிதுன் ரியான், ஒரு சிறுவனின் இயல்பை மிகையின்றி வெளிப்படுத்தி இருக்கிறார். 'லையர்' அப்பாவிடம் இருந்து தொலைந்து, அடிக்கடி மலையேறி விட்டு, 'இறங்க தெரியல' என்கிறபோது தியேட்டரில் சிரிப்பலை. சந்தோஷ் தயாநிதியின் இசையில், மதன் கார்க்கி வரிகளில், துண்டு துண்டாக வரும் பாடல்கள் அதிகம் என்றாலும் கதையின் உணர்வுகளை இசையோடு இயல்பாகக் கடத்துகிறது. ஏகாம்பரத்தின் ஒளிப்பதிவு படத்தின் வேகத்துக்கு உதவி இருக்கிறது. இரண்டாம் பாதியில் சில காட்சிகள் மீண்டும் வருவதும், 'பேரன்டிங்' பற்றி கிளாஸ் எடுப்பது போல்வரும் வசனங்களும் கொஞ்சம் வேகத்தடை என்றாலும் 'பறந்து போ' சுகமான அனுபவத்துடன் நம்மை பறந்து போகவே வைக்கிறது. குழந்தைகளுடன் பெற்றோரும் பார்க்க வேண்டிய படம் இது.

## பிரியங்கா சோப்ராவின் ரூ.1.85 லட்சம் உடை

பிரியங்கா சோப்ரா அணியும் உடைகள், நகைகள் காரணமாக அவரது புகைப்படங்கள் வைரலாகி வரும் நிலையில், அவர் அணிந்து வந்திருந்த உடை இப்போது பேசுபொருளாகியுள்ளது. மற்ற டென்னிஸ் போட்டிகள் போன்று அல்லாமல் விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் பங்கேற்கும் வீரர், வீராங்கனைகள் வெள்ளை நிற உடை அணிந்து விளையாடுவது பாரம்பரியமாகும். பிரியங்கா சோப்ராவும் இதேபோன்று வெள்ளை நிற உடை அணிந்து வந்தது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

பிரியாங்காவின் உடை பேசுபொருளானதற்கு முக்கிய காரணம் அதன் விலை. அதாவது பிரியாங்கா அணிந்திருந்த உடையின் விலை ரூ.1,84,540 என்று தகவல்கள் கூறுகின்றன. Eldred Cotton Pique Day Dress என்று அழைக்கப்படும் இந்த உடையை பிரபல வடிவமைப்பாளரான ரால்ப் லாரன் வடிவமைப்பு செய்துள்ளார். பிரியங்கா சோப்ராவின் கணவர் நிக் ஜோனாஸ் உடையையும் ரால்ப் லாரன் தான் வடிவமைத்து இருந்தார். பிரியங்கா சோப்ரா அணிந்திருந்த ஆடை கழுத்தில் காலரும், கை இல்லாத வடிவமைப்பிலும் இருந்தது. பிரியங்கா சோப்ரா மற்றும் நிக் ஜோனாஸ் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி பரவி வருகின்றன.

## கவாஸ்கர் கோஹ்லியை முந்தினார்: பேட்டிங்கில் கில் அதிரடி சாதனைகள் தவிடுபொடி




இங்கிலாந்துடன் நடந்து வரும் 2வது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் இந்தியாவின் இளம் கேப்டன் சுப்மன் கில் 269 ரன் குவித்து, இங்கிலாந்து அணிக்கு பெரியளவில் சவால் எழுப்பினார். இதன் மூலம், இங்கிலாந்தில், 1979ம் ஆண்டில் அந்நாட்டு அணிக்கு எதிரான டெஸ்டில் 221 ரன் குவித்து, இந்திய அணி ஜாம்பவான் சுனில் கவாஸ்கர் படைத்த, இங்கிலாந்து அணிக்கு எதிரான அதிகபட்ச ஸ்கோர் சாதனையை சுப்மன் கில் முறியடித்துள்ளார்.

தவிர, இந்திய கேப்டனாக கடந்த 2019ல், தென் ஆப்ரிக்கா அணிக்கு எதிராக நடந்த டெஸ்ட் போட்டியில் விராட் கோஹ்லி அதிகபட்சமாக அடித்த 254 ரன் சாதனையையும் கில் தகர்த்துள்ளார். இந்தியாவுக்கு வெளியே அதிக ஸ்கோர் அடித்த இந்திய கேப்டன் என்ற சாதனையை கடந்த 2016ல், வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான போட்டியில் 200 ரன் குவித்து விராட் கோஹ்லி அரங்கேற்றி இருந்தார். அந்த சாதனையும், கில்லின் அதிரடியால் தவிடுபொடியாகி உள்ளது. வெளிநாட்டில் நடக்கும் போட்டிகளில் இரட்டைச் சதம் விளாசிய 2வது இந்திய கேப்டனாக, கோஹ்லிக்கு பின், கில் திகழ்கிறார்.

## சூப்பர் யுனைடெட் செஸ் போட்டி: ரேபிட் பிரிவில் பட்டம் வென்றார் குகேஷ்




சூப்பர் யுனைடெட் ரேபிட் மற்றும் பிளிட்ஸ் செஸ் போட்டி குரோஷியாவின் ஸாக்ரெப் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் உலக சாம்பியனான இந்தியாவின் குகேஷ், ரேபிட் பிரிவில் பட்டம் வென்றுள்ளார். கிராண்ட் செஸ் டூரில் இந்த தொடரும் ஒன்றாக உள்ளது. இதன் ரேபிட் பார்மெட் முதல் சுற்று ஆட்டத்தில் குகேஷ் தோல்வியை தழுவினார். அதன் பின்னர் நடைபெற்ற 5 சுற்றுகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றார். 6வது சுற்று ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சனை குகேஷ் வீழ்த்தினார். தொடர்ந்து 7வது சுற்றில் அனிஷ் கிரி, 8வது சுற்றில் இவான் சரிச் உடன் விளையாடினார். அந்த இரண்டு சுற்றும் டிராவில் முடிந்தது. இதன் மூலம் ரேபிட் பிரிவில் 14 புள்ளிகளுடன் பட்டம் வென்றார் குகேஷ். ரேபிட் பிரிவில் 11 புள்ளிகளுடன் இரண்டாம் இடம் பிடித்தார் போலந்து வீரர் துடா. 10 புள்ளிகளுடன் மூன்றாம் இடம் பிடித்தார் கார்ல்சன். 9 புள்ளிகள் எடுத்த பிரக்ஞானந்தா 4ம் இடத்தை பகிர்ந்து கொண்டார்.

## பும்ராவை விட அசாத்திய உடல் தகுதி: பிட்சிற்கு உகந்தவாறு பந்து வீச்சை மேம்படுத்தி சிராஜ் அபாரம்




பொதுவாக குடும்பங்களில் நாம் காண்பதுதான். ஒரு பிள்ளை செல்லப்பிள்ளை, அவருக்கு எல்லாம் நடக்கும் ஆனால் ஒரு பிள்ளை உழைப்புப் பிள்ளை இவர் எப்போதும் நெருக்கடியிலும் அழுத்தத்திலுமே இருப்பார். இந்திய அணி என்னும் குடும்பத்தில் பும்ரா செல்லப்பிள்ளை, இந்தத் தார்ச்சாலைப் பிட்சில் சிராஜ் உழைக்கும் பிள்ளை. இந்தத் தார்ச்சாலைப் பிட்சில் செல்லப்பிள்ளைக்கு ரெஸ்ட் அளித்து உழைப்புப் பிள்ளை சிராஜிடமிருந்து கூடுதல் உழைப்பு கோரப்பட அந்த பணிக்கு தன் உடல் தகுதியை வைத்திருந்த அவர் பிரமாதமாக கொடுத்த இலக்கை நிறைவேற்றினார்.

எட்ஜ்பாஸ்டன் என்னும் படுமோசமான ஃபிளாட் பிட்சில் சிராஜ் நேற்று 19.3 ஓவர்கள் வீசி 3 மெய்டன்களுடன் 70 ரன்களுக்கு 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இது உண்மையில் அசாத்தியமான ஒரு பந்து வீச்சுதான். பிரசித் கிருஷ்ணா சுத்த வேஸ்ட் என்பது புரிந்துவிட்டது, அடுத்து இவருக்குப் பதிலாக யார் என்பதுதான் இப்போது கம்பீர்கில் கையில் இருக்கும் கேள்வி. நேற்று வந்தவுடனேயே 2 விக்கெட்டுகளை அடுத்தடுத்து, அதுவும் ஜோ ரூட், ஆக்ரோஷ பேட்டர் பென் ஸ்டோக்ஸ் ஆகியோரை வீட்டுக்கு அனுப்பினார். பும்ரா இருக்கும் போது சிராஜ் செகண்ட் ஃபிடில் ஆக இருக்கிறார், பும்ரா இல்லாத போது கூடுதல் முயற்சியை இட்டு அற்புதமாக வீசுகிறார். இதற்குப் புள்ளி விவர உடன்பாடும் உண்டு. கிரிக் இன்போ தகவல்களின் படி பும்ராவுடன் சிராஜ் 23 டெஸ்ட்கள் ஆடியிருக்கிறார், இதில் சிராஜின் சராசரி 33.82. பும்ரா இல்லாமல் சிராஜ் ஆடியது 15 டெஸ்ட் போட்டிகள். இதில் அவரது சராசரி 25.20.

அதே போல் முகமது ஷமியுடன் ஆடும்போது சிராஜின் சராசரி 34.96. பும்ரா, ஷமி இருவருடன் ஆடும்போது சிராஜின் சராசரி 33.05. பும்ரா, ஷமி இருவருமே இல்லாத போது சிராஜின் சராசரி 22.27 . இதற்குக் காரணமுள்ளது, பும்ரா, ஷமி இருவரும் இருக்கும்போது சிராஜ் ரெட் ஹாட் புதிய பந்தில் வீச வாய்ப்பு மிகமிகக் குறைவு. பழைய பந்தில்தான் வீச முடியும். அப்படி வீசும்போது கட்டுப்படுத்தும் ரோலில்தான் பெரும்பாலும் வீச முடியும். ஐபிஎல் தொடர்களில் அதிகம் வீசி வீசி இப்போது சிராஜிடம் அவுட்ஸ்விங்கர்கள் காணாமல் போயுள்ளன. அதை மீட்டெடுக்க பயிற்சியாளர்கள் உதவினால் சிராஜ் உண்மையில் அயல்நாட்டுப் பிட்ச்களில் டெட்லியாக இருப்பார். சில வேளைகளில் பும்ரா போடும் வேகத்தில் அவரைப்போலவே பேட்டர்களைத் திணறச் செய்கிறார் சிராஜ். ஆனால் பெயர் கிடைக்காது, எப்படி விவ் ரிச்சர்ட்ஸ் இருக்கும் போது கார்டன் கிரீனிட்ஜ், ராய் பிரெடெரிக்ஸ், ஹெய்ன்ஸ் என்னதான் ஆடினாலும் பெயர் கிடைக்காது அதுபோலவே இதுவும்.

இந்த டெஸ்ட்டிலும் கூட ஆகாஷ் தீப் தான் முதல் ஓவரை வீசினார், சிராஜ் தான் வீச வேண்டிய முனையை தானே தேர்ந்தெடுக்க முடியாத இடத்தில் தான் இருக்கிறார். ஆனால் ஸ்விங்கில் சமரசம் செய்து கொள்ளவில்லை பிட்ச் உதவி கொஞ்சம் கூட இல்லை. ஆனாலும் இங்கிலாந்து பவுலர்களை விட நன்றாகவே ஸ்விங் செய்தார் சிராஜ்.இன்னும் கொஞ்சம் அவர் இன்ஸ்விங்கரை குறைத்து அவுட் ஸ்விங்கரை அதிகம் வீசியிருக்கலாம் என்று நாம் நினைக்கும் போது ஆஃப் திசையில் பேக்டு பீல்டை வைத்துக் கொண்டு வீச மன தைரியம் வேண்டும். அதனால் சிராஜ் என்ன செய்தார் சாதுரியமாக ஸ்டம்ப் அட்டாக் என்ற ஒரு உத்தியைக் கையாண்டார். அது சில வேளைகளில் பதற்றத்தை எதிர் வீரர்களுக்கு உருவாக்கியது, அதனால்தான் புரூக் இறங்கி வந்து அவரை பவுண்டரி, சிக்ஸ் விளாசினார், இது ரிஸ்க் ஷாட். இதில் அவுட் ஆனால் அவ்வளவுதான். ஆகவே இந்த லெந்த்தில் வீசுவோம், ஆஃப் ஸ்டம்புக்கு வெளியே வீசி அவர்களுக்கு தன்னம்பிக்கை தரும் கட், ட்ரைவ்களுக்கு ஏன் வீச வேண்டும் என்பதும் சிராஜின் எண்ணமாக இருக்கலாம்.

சிராஜ் ஜியோ ஹாட்ஸ்டாரில் கூறும்போது, "5 விக்கெட்டுகளைச் சாய்க்க ஓராண்டாக காத்திருக்கிறேன், 4 விக்கெட்டுகளுடன் முடிகிறேன், நான் நன்றாக வீசினாலும் விக்கெட்டுகள் கிடைப்பதில்லை. இது எனக்கு சிறப்புத் தருணம், ஏனெனில் இங்கிலாந்தில் நான் அதிகமாக ஒரு இன்னிங்சில் 4 விக்கெட்டுகளையே கைப்பற்றியிருக்கிறேன்." என்றார்.

ஆகவே சிராஜை ஏதோ செகண்ட் ஃபிடில் பவுலர் என்று கருத வேண்டாம் என்று அவரே அணித்தேர்வுக்குழுவுக்கு செய்தி அனுப்பியுள்ளார். இப்படிப்பட்ட மண் பிட்சில் அவர் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார் என்றால் அவரது தன்னம்பிக்கை உயரும் பந்து வீச்சு மேலும் மெருகு பெறும்.

எல்லாவற்றிற்கும் மேலாக பும்ரா, ஷமி அளவுக்கு ஓவர்களை சில வேளைகளில் வீசினாலும் ஐபிஎல் கிரிக்கெட்டில் ஆடினாலும் அவரது உடல் தகுதி ஷமி, பும்ராவுக்கும் ஒரு பாடமாக விளங்குகிறது.





# மதுரை ரயில்வே காலனி சிறப்பு குழந்தைகள் பள்ளிக்கு நவீன வசதிகளுடன் புதிய கட்டிடம்

மதுரை, ஜூன்.06-

மனவளம் குன்றிய குழந்தைகளுக்கு சிறப்பு கவனம், கல்வி, ஆதரவு தேவைப்படுகிறது. இந்த சிறப்பு குழந்தைகளுக்கான அட்சயா பள்ளி மதுரை ரயில்வே காலனியில் 2000 ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியில் 27 சிறப்பு குழந்தைகள் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களுக்கு யோகாசனம், நடை பயிற்சி, உடல் இயக்க பயிற்சி, வாழ்க்கை திறன் பயிற்சி, தொழில் சார் பயிற்சி போன்றவை அளிக்கப்படுகின்றன. இந்தப் பள்ளியை தெற்கு ரயில்வே பெண்கள் நல சங்கத்தின் மதுரை கிளை நடத்தி வருகிறது. இந்தப் பள்ளியில் சிறப்பு குழந்தைகளுக்காக நவீன வசதிகளுடன் 550 சதுர அடியில் புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இந்த புதிய கட்டிடத்தை தெற்கு ரயில்வே பெண்கள் நல சங்க தலைவி பிரியா சரத் ஸ்ரீவத்சவா வெள்ளிக்கிழமை அன்று திறந்து வைத்தார்.

இந்த கட்டிடத்தில் கல்வி பயில மற்றும் பயிற்சிகள் எடுக்க விசாலமான குளிர்சாதன வசதியுடன் கூடிய அரங்கு உள்ளது. அரங்கிற்கு எளிதாக சென்று வர 45 மீட்டர் நீளத்தில் சாய்வுதளப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. புதிய கட்டிட பணியோடு சுவர் சிற்ப ஒப்பனைச் சாந்து பூசப்பட்ட சுற்றுச்சுவர் மற்றும் கண்ணைக் கவரும் வர்ணம் பூசப்பட்ட வகுப்பறைகள் ஆகியவையும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. பள்ளி வளாகத்தில் பசுமை பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளது. விழாவிற்கு மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் சரத் ஸ்ரீவத்சவா தலைமை வகித்தார். விழாவில் உயர் நீதிமன்ற நீதிபதி மனைவியும், மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தின் மாற்றுத்திறனாளிகள் நல ஆலோசனை குழு உறுப்பினருமான காமாட்சி ஜி. ஆர். சுவாமிநாதன் , ரயில்வே பெண்கள் நலச்சங்க உதவி தலைவி ஜோதி நாகேஸ்வர ராவ், சங்கப் பொருளாளர் வசந்தி கிரி பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் கோவில்பாப்பாகுடி ஊராட்சியில் சியோன் நகரில் அங்கன்வாடி மையம் புதிய கட்டிட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் ஆய்வு மேற்கொண்டார்.



■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் கோவில்பாப்பாகுடி ஊராட்சியில் ஸ்ரீ.பாக்கியலட்சுமி நகரில் புதிய தார் சாலை பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.

# மாநில பொது ஆய்வு குழுவினர் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆய்வு மேற்கொள்வது தொடர்பான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது

கன்னியாகுமரி, ஜூலை.06-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாநில பொது ஆய்வு குழுவினர் (STATE COMMON REVIEW MISSION) கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆய்வு மேற்கொள்வது தொடர்பான ஒருங்கிணைப்பு குழுகூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, தெரிவிக்கையில்

தமிழ்நாடு அரசின் உத்தரவின் அடிப்படையில், மத்திய மற்றும் மாநில அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் நலத்திட்டங்கள் பொதுமக்கள் அனைவருக்கும் சிறப்பான முறையில் சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.



அதன் ஒரு பகுதியாக, தேசிய நலக்குழுமம், மருத்துவ இயக்குநரகம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சேர்ந்த 26 பேர் கொண்ட உயர் நிலை குழு, தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு.அரவிந்த், இ.அ,ப., அவர்களின் தலைமையில், 22.07.2025 அன்று கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளனர். இக்குழுவினர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் மருத்துவம் மற்றும் மக்கள் நலத்திட்டங்களை நேரில் பார்வையிட்டு, செயல்திறன் மற்றும் பயன்திறனை மதிப்பீடு செய்து ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

மத்திய மற்றும் மாநில அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அனைத்து முக்கிய நலத்திட்டங்களும் விரிவாக ஆய்வு செய்யப்படவுள்ளது. சுகாதார கட்டமைப்பு, மருத்துவ சேவைகள் பொதுமக்களை முறையாக சென்றடைவது உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து குழுவினர் நேரில் பார்வையிட்டும் பொதுமக்களிடமும் நேரில் ஆய்வு செய்ய உள்ளனர்.

ஆய்வு நடைபெறும் போது கன்னியாகுமரி மாவட்ட சுகாதாரத்துறையின் அனைத்து அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் களப்பணியாளர்கள் முழுமையாக தயார் நிலையில் இருக்க வேண்டும். மேலும், இந்த ஆய்வுப் பணிகளின் போது அனைத்து பணியாளர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் முதல்வர்கள் மரு.சுரேஸ் பாலன் (பொ) (சாரிப்பள்ளம் மருத்துவக்கல்லூரி மருத்துமனை), மரு.கிளாரன்ஸ் டேவி (கோட்டார் அரசு ஆயுர்வேதா மருத்துவக்கல்லூரி), மரு.அனிதா (சித்தா மருத்துவக்கல்லூரி), தேசிய சுகாதார குழு ஆலோசகர் மரு.மதுசூதனன், இணை இயக்குநர்கள் மரு.ரவிகுமார் (மருத்துவ நலப்பணிகள்), மரு.சுபைர்கான் (காசநோய்), துணை இயக்குநர் மரு.கிரிஜா, உறைவிட மருத்துவர் மரு.விஜயலெட்சுமி, மருத்துவர்கள், செவிலியர்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் அகரம் தென் ஊராட்சியில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் ரூ.1.96 கோடி மதிப்பீட்டில், 23 சிமெண்ட் சாலை மற்றும் பொது கிணறு ஆகியவற்றை, பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் இந்நிகழ்வில் அகரம்தென் ஊராட்சி மன்ற தலைவர் சி.ஜே.ஜெகதீஸ்வரன் வட்டார வளர்ச்சி அலுவலர், கிளை கழக செயலாளர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், உங்களுடன் ஸ்டாலின் திட்ட தன்னார்வலர்களுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்.86 வில்லாபுரம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேயர் இந்திராணி பொன்வசந்த் ஆய்வு மேற்கொண்டு பரிசோதனைக்கு வரும் பொதுமக்களிடம் மருத்துவ சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார் அருகில் துணை மேயர்தி. நாகராஜன், நகர்நல அலுவலர் மரு.இந்திரா, உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# 12 நாடுகளுக்கான வரி கடிதத்தில் கையெழுத்து போட்டுவிட்டேன்: டொனால்ட் ட்ரம்ப்

வாஷிங்டன், ஜூலை.06-

வரி விகிதம் தொடர்பாக 12 நாடுகளுக்கான கடிதத்தில் தான் கையெழுத்து இட்டுவிட்டதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரியில் அமெரிக்க அதிபராக மீண்டும் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், பல்வேறு நாடுகளுக்கான இறக்குமதி வரியை கடுமையாக உயர்த்தினார். இதற்கு அனைத்து நாடுகளும் கடும் அதிருப்தி தெரிவித்தன. இதையடுத்து, பல்வேறு விதமான வரி விகிதங்களை மாற்றி 90 நாட்களுக்கு தற்காலிக அடிப்படை வரியாக 10% ஐ நிர்ணயித்து ட்ரம்ப் உத்தரவிட்டார்.

இந்த காலக்கெடு முடிவடைவதற்குள் அமெரிக்கா உடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள ட்ரம்ப் அழைப்பு விடுத்தார். இதையடுத்து, பல்வேறு நாடுகளும் அமெரிக்கா உடன் பேச்சுவார்த்தை நடத்தின. பிரிட்டன் உடனான பேச்சுவார்த்தை மட்டுமே முடிவுக்கு வந்தது. பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10% வரி உயர்வு மட்டும் விதிக்கப்படும் என்ற ஒப்பந்தம் எட்டப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா உள்பட பல நாடுகள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

90 நாட்கள் காலக்கெடு ஜூலை 9ம் தேதியுடன் முடிவடைய உள்ளதால், அதற்குள் ஒப்பந்தத்தை மேற்கொள்ள பல நாடுகள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், நியூ ஜெர்சி செல்லும் வழியில் விமானத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப், "12 நாடுகளுக்கான வரி கடிதங்களில் கையெழுத்து இட்டுவிட்டேன். அந்த நாடுகள் எவை எவை என்பது திங்கள் கிழமை வெளியிடப்படும். இதை எடுத்துக்கொள்ளுங்கள் அல்லது விட்டுவிடுங்கள் என்பதே அமெரிக்காவின் அணுகுமுறையாக இருக்கும். ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத நாடுகளுக்கு வரி விகிதம் அதிகரிக்கப்படும். அது அதிகபட்சம் 70% வரை இருக்கும். புதிய வரி விகிதம் ஆகஸ்ட் 1 முதல் அமலுக்கு வரும்." என தெரிவித்துள்ளார்.

# கலைஞர் கைவினை திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு வங்கிகள் மூலமாக கடனுதவிகள் வழங்குவது தொடர்பாக வங்கியாளர்களுடன் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் நிர்மல் ராஜ் கலந்தாய்வு

கன்னியாகுமரி, ஜூலை.06-

கன்னியாகுமரி மாவட்ட தொழில் மையம் சார்பில் கலைஞர் கைவினை திட்டத்தின்கீழ் கடன்உதவி பெற விண்ணப்பித்தவர்களுக்கு கடன் உதவிகள் வழங்குவது தொடர்பாக வங்கியாளர்களுடனான கலந்தாலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கலந்தாய்வு கூட்டத்தில் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் நிர்மல் ராஜ் கலந்துகொண்டு வங்கியாளர்களிடையே தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறை வாயிலாக கலை மற்றும் கைவினைத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர்க்கு மேம்பட்ட பயிற்சி அளிக்கவும், மானியத்துடன் கூடிய பிணையமில்லாக் கடன் வழங்கவும், அவர்கள் தயாரித்த பொருட்களை சந்தைப்படுத்தும் திறனை உயர்த்தவும் ஆண்டுதோறும் 10,000 பேர் பயன் பெறும் வகையில் ரூ.20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கலைஞர் கைவினை திட்டம் 202425 முதல் செயல்படுத்தப்படும் என 17.12.2024 அன்று தமிழக அரசு அறிவித்தது. இத்திட்டம் நடைமுறைக்கு வந்த போது வெகு சிலரே கடனுதவி பெற விண்ணப்பித்தார்கள். தற்போது அதிகளவில் தொழில் முனைவோர்கள் கடன்பெற விண்ணப்பித்



துள்ளார்கள். இது கலைஞர் கைவினை திட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும். எனவே வங்கியாளர்கள் தகுதியானவர்களுக்கு உடனுக்குடன் சிறு தொழில் புரிய கடனுதவி வழங்கி அவர்கள் வாழ்வில் ஏற்றம் பெற முன்வர வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் தையற்கலைஞர், மண்பாண்டங்கள், சுடுமண் வேலை செய்வோர், சிற்பக் கைவினைஞர், தச்சு வேலை செய்வோர், பூ தொடுப்போர், பூ அலங்காரம் செய்வோர், சிகை அலங்காரம் செய்வோர், அழகுக் கலை நிபுணர், பாய் பின்னுவோர், கூடை முடைவோர், மூங்கிலாலான பொருட்கள் செய்வோர், நெசவு செய்வோர், வண்ணம் தீட்டுவோர், சிறு கட்டடம் கட்டும் வேலை செய்வோர், தோல் பொருட்கள் செய்வோர், உலோகப் பொருட்கள் செய்வோர், தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் செய்வோர், மீன் வலை செய்வோர் உள்ளிட்ட பல்வகைக் கலை மற்றும் கைவினைத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர்க்கு தொழில்திறம் சார் மேம்பட்ட பயிற்சியுடன் அவர்கள் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய கருவிகள் கொண்டு தொழில்புரிய ரூ.3 இலட்சம் வரை பிணையமில்லாமல் கடனுதவிகள் வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த கடன் தொகையில் 25% அதிக பட்சம் ரூ.50,000/ மானியமாக வழங்கப்படும். கடனைத் திருப்பிச் செலுத்தும் காலத்தில் 5% வரை வட்டி மானியமும் வழங்கப்படும். அனைத்து அரசு மற்றும் தனியார் வணிக வங்கிகள், தாட்கோ வங்கி, கூட்டுறவு வங்கி மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கத் தகுதி பெற்றவர்கள்.

மேலும் கைவினைஞர்கள் தயாரித்த பொருட்களை சந்தைப்படுத்தும் திறனை உயர்த்துவதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்புவோர் 35 வயதுக்கு மேற்பட்டவராகவும், எந்த வகைத் தொழிலுக்காக கடனுதவி பெற விரும்புகிறாரோ அந்தத் தொழிலில் குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் முன் அனுபவம் கொண்டவராகவும் இருக்க வேண்டும் என அறிவிக்கபட்டுள்ளது.

கலைஞர் கைவினைத் திட்டத்தில் நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் 7918 விண்ணப்பங்கள் பெறப்பட்டதில், 1886 விண்ணப்பங்கள் வங்கிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதில் முதல் கட்டமாக 470 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ரூ.10.28 கோடி மதிப்பில் வங்கிக் கடனும், ஒரு 1.92 கோடி அரசு மானியமும் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள விண்ணப்பங்களை விரைவாக பரிசீலித்து தகுதியான தொழில் முனைவோர்கள் தொழில் துவங்க கடன் உதவிகள் வழங்கிட வேண்டுமென அனைத்து வங்கி மேலாளர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் நிர்மல் ராஜ் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.பெர்பர்ட், முன்னோடி வங்கி மேலாளர் திரு.செல்வராஜ், உதவி திட்ட இயக்குநர் வளர்மதி உட்பட அலுவலர்கள், வங்கியாளர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161